ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2051/38 - 2017 දෙසැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2017.12.29

*2051/38 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்***

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வியாபார அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகிய நான், முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராகவிருப்பதனால், 2014, யூன் 16 ஆந் திகதிய 1867/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக இக்கட்டளையின் மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :-

கருத்திட்டத்தை அமுலாக்குவதற்கு வழங்கப்பட்ட காலத்தை நீடிப்பதற்கென, 2014, யூன் 16 ஆந் திகதிய 1867/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையின் (4) ஆம் வாசகம் பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(4) மேற்கூறப்பட்ட கருத்திட்டம் இலங்கை முதலீட்டுச் சபையுடனான கருத்திட்ட உடன்படிக்கையில் கூறப்பட்ட திகதியிலிருந்து தொண்ணூறு (90) மாதங்களினுள் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குதல் வேண்டும்.".

மலிக் சமரவிக்ரம,
அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வியாபார அமைச்சர்.

கொழும்பு,
2017, திசெம்பர் 29.

01- 457

1A - PG 3851— 407 (2018/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.